# ஆதி மார்க்க னீதி மொழி

**April 2025**

***இதழ் 45 – ஏப்ரல் மாதம் 2025 வெளியீடு***

***© AMNA Trust, Chennai***



## மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் னோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்நு மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்நு ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்நு தேவப்பிறப்பிலே பிறந்நு ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே ! பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகை 45ஆவது இதழாக மெய்ம்மணம் கமழ உங்கள் கைகளில் மலர்ந்துள்ளது. இந்த அவையின் அங்கங்கள் பதின்மரின் உழைப்புடன் அவர்கள் செவிமடுத்து கேட்டு படித்து பார்த்த ஒன்றை உள்வாங்கி இன்னது இன்னதென இன்னதுக்கு இன்னதென உணர்ந்து தொகுத்து வழங்கியதே இந்த சஞ்சிகை. இதற்கான உழைப்பும் நோக்கமும் இதனைப் படித்து தேடி வரக்கூடிய சற்சன மக்கள் யாவரும் நித்திய நன்மையை உணர்ந்து, மறலியின் அடையாளமாகிய கசப்பு தீட்டு பிணநாற்ற ஜலம் வெளியாகி யுகங்கோடிகால நரக வேதனைக்கு போகாமல் இருக்க வேண்டும் என்ற ஒன்றைக் கருதியே.

குன்றில் வாழ்பவன் பேரின்பம் கொள்ளுதல் எவர்க்கும் வேண்டும் என்ற காமீல்களின் உன்னத நோக்கம் ஒன்றையே அடிநாதமாகக் கொண்டு மெய்ம் மணம் கமழ மலர்ந்து வருவதே இம் மின்னணு சஞ்சிகை. பிரதி மாதமும் நன்மையும் புதுமையும் மாறாமல் மனுமுளை துவங்கிய காலம் முதல் உண்டான வேதங்கள் பறைசாற்றிய சேதிகளை தன்னகத்தே பொதிந்து வரும் இந்த சஞ்சிகை விளம்பரமோ ஆள் சேர்க்கும் அவசியமோ இல்லாத ஒன்றாக மக்களின் நன்மை கருதியே ஓங்கி உரத்த குரலில் ஒலித்துக் கொண்டு இருக்கிறது.

ஏன் உரைத்தேன் இரக்கத்தால் எடுத்து உரைத்தேன் பொய் புகலேன் புனைந்துரையேன் சத்தியம் சொல்கின்றேன் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடலாம் கண்டீர் என்ற அப் பரம்பொருள் வள்ளல் பெருமான் அருளிய ஒன்றை அடிநாதமாகக் கொண்டு அவர்களின் திருவடி போற்றி வணங்கி மக்களின் நன்மை கருதி மலர்வதே இந்த சஞ்சிகை என்பது சத்தியம்.

இதனை பார்த்து படித்து தேடுகின்ற என் மக்கள் யாவரும் இது ஓர் அறிவிப்போ, பிரசங்கமோ என எண்ணாமல் உனக்கு வர இருக்கும் எமனுடைய அவமான அவஸ்தையை மாற்றவல்ல மாமருந்தாக பேரின்ப நிலைபெற உத்தி கூற பிரதி மாதமும் என் உன்னத முன்னுரையுடன் வரும் சஞ்ஞிகை என உணர்ந்து உய்ய வேண்டும். தேடுகின்ற மக்கள் யாவரும் தேடிவரும் பொருளைக் கண்டு தேவர்களாக வாழ எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*இந்த உலகிற்கு இதற்கு முன்வந்த பெரியோர்கள் இந்த னித்திய செயலைப் பற்றி எவ்வளவு பேசியிருப்பார்கள். அந்த எல்லைகளில் எல்லாம் ஒன்று இரண்டு என்று தான் மெய்த்தலைகள் காணப்படுகின்றன. தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் னிர்த்தூளம் பண்ணி அடிமையானவர்கள்தான் இதற்கு அருகதையானவர்கள் என்ற சட்டம் எம்முடைய காலம் வரையிலும் இருந்நது. னாம் தான் அதை மாற்றி வைத்தோம். ஏனெனில் ஊழித் தீர்ப்புனேரம் னெருங்னி விட்டது. அன்னாட்டினுக்கு யுக வித்துக்களாக னம் கையில் சிக்கின தலைகள் எல்லாம் மாற்றி ஆக்குவோம் என்ற எம் ஆத்திரம்தான் இப்படிச் சட்டத்தை மாற்றி வைக்கச் செய்தது. உடல் பொருள் ஆவியை னீ இப்படித் தரவில்லை என்றாலும், பின்னே எமக்கு வாங்னிக்கொள்ளத் தெரியும். எம் கைப்பாணமாக, எம் ஆளாக எமன்தான் இருக்கிறானே.*

*ஆச்சரியத்தை, அதிசயத்தைப் போய்ப் பார்க்கிற அறிவு இவனிடத்தில் இருக்கிறதல்லவா? ஆம். சினிமா முதலியவற்றைப் போய்ப் பார்த்துச் சந்நோஷப்படுகிறானே. அவை அவ்வளவும் அழிந்நுபோகிற இன்பந்நானே. னித்திய அதிசயத்தை, பேரின்பம் அளக்கும் அறிவு வல்லபத்தை அடைய, இங்nு ஏன் வரமாட்டேன் என்கிறான்? அதிசயப் பிறப்பை அடைய வந்நவனுக்கு அதிசயச் செயல் வரவேண்டும். அதிசய வாழ்வில் புக வேண்டும். காலமெல்லாம் கருவாடே தின்று கருவாட்டு வாசனையே தேடுகிறது. கஸ்தூரி வாசனை பிடிக்கவில்லை. இதைக்கண்டு னாம் வருந்நி அழாமல் எப்படி இருக்க முடியும்?*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2025 மார்ச் மாதம் அவை நிகழ்வுகள் – 2025 ஏப்ரல் மாதம் வெளியீடு

## 01-03-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அங்ஙமதிடத்தி லைம்புலக் கதவை...** என்ற குருமணி மாலை பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**
மங்காப் புதுமை சிந்தும் குலப்புலமையாகிய ஆசானின் னாதமே ஐம்புலக்கதவை அடைக்கும் பேரறிவாக நின்று பிறவானெறியில் குடியேற்றி வாழ வைக்கிறது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் : திருவாக்கியம் எண் - 204** யாரும் கட்ட முடியாத திருமாளிகையாகிய நம் தேகத்தின் தலைவாசலுக்குள் நுழைய விடாது தடுப்பது மனம். மெய் ஆசானின் இரக்கமே நம் மனதை செம்மை செய்து வர்ணீகரமாகிய அம்மாளிகைக்குள் நுழைந்து கோடி கால செல்வ வாழ்வை கைக் கொள்ளச் செய்கிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - வெளிப்பாடு அதிகாரம் 5 : 6**
ஏழு முத்திரைகள் என்பது அமானித இரகசியமாகும். யோக முத்திரைகளின் தலையாகிய சின்முத்திரையின் சிறப்பை உணர்ந்தவர்களே, ஏழு மாயத்திரைகளைக் கிழித்தெறிந்து எட்டாவது நிலையிலுள்ள மக்காம் எனும் இறை இல்லத்தில் நுழைந்து இன்புற்று வாழ்கிறார்கள்.

**பத்தியத்திடம் - குருபிரான் அருளமுதம்:**
தன்னிலை கண்டு உணரும் உன்னத பெருநிலை இரகசியமே பத்தியத்திடம். வேத முடிவாகிய அர்-ரகசிய பொருளை தன்னுள் அறிந்த மஹரூதரின் அருட்கருணையால், சிறாத்துல் முஸ்தகீம் எனும் நெருப்பாறு மயிர்ப்பாலம் கடந்து, அறிவு மாளிகைக்குள் குடியேறலாம். தன்னை அறியும் தவமுறையின் மூலம் இரு வாலும் ஒரு சுழி இருக்கும் இடமாகிய ஜீவ சிம்மாசனத்தில் அமர்ந்தவர்களே திடமுறைப் பதத்தில் நிலைத்து நின்ற நித்திய சூரியர்கள். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 02-03-2025 ~ ஞாயிற்றுக்கிழமை
## மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா ஆண்டு பூர்த்தி ~ சிறப்பு அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் பொற்பாதம் போற்றி, **அடங்ஙலொ டுங்ஙுமிடம் படனின்றவ ரண்டமுதூறிடவும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
அழியாத ஒளி தேகத்தோடு னித்திய சூரியராக னித்திய உலகத்தில் வாழும் தேவகுருவின் அருகிருந்து மெய்க்கல்வி கற்று ஜென்ம சாபல்யம் பெறுவது குருகுலவாசம். ஆடி ஆகாய கங்கையாக வரும் மெய்க்குருவின் நாதத்தால், ஞான சைதன்யமான ஜீவனின் ரகசியம் அறிந்து அகத்தூய்மை பெற்றே பேரின்பம் பூத்து கல்வி, வீடு பதம் அடைய முடியும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் சங்கர்:*

உயர்வு, தாழ்வுக்குக் காரணமாக வினையின் தலைவனான மனம், அறிவு ரூபகமாக மாறிக் கொள்வதே ஞானப்பாதையில் நம்மை முன்னேற்றும். நாம் இத்தேகம் அல்ல என உணர்த்தி வெற்றிப் பாதையில் அழைத்து செல்லும் அவையே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் வடிவேலன்:*

இறைவனை அறியும் அறிவை உணர்த்தும் மெய்யான தேவகுருவின் அருள் அமுதமே வள்ளலார் அருளிய ஞான வழியாகிய சன்மார்க்க மரபாகும். சாகாத்தலை-வேகாக்கால்-போகாப்புனல் எனும் சன்மார்க்க மரபை அறிவித்து, அதில் வழிநடத்தி, நான் எனும் அகங்காரத்தில் உள்ள நரனை அழித்து மறுப்பிறப்பு அளிக்கின்றார்கள். செத்திடம்-பிறந்திடம் எனும் ரகசியத்தையும் அருளி, பேரின்ப வாழ்வில் பழக்கி வைப்பவர்களே அவதார புருஷர்கள். ஜென்ம சாபல்யச் செயலை னித்தமும் நம் தலையில் ஏற்றி வைத்துக் கொண்டிருக்கும் குருவைப் போற்றி, பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 06-03-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **னம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான்...** எனும் தெய்வத் திருப்பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

புலனைந்தும் வென்று அசைவற்ற மனதுடன் சைவ நிலையில் இருப்பவரே மகாவீரர். இறைவனின் சாயலான ஓங்காரத் தொனி கொண்டு ஞானத்தை அருள்பவரே தம் ஆகிய பிராணனை கைக்கொண்ட தம்பிரான். சிவன் எனும் வாடாத தீபமே அருட்பெருஞ்ஜோதியாக, பொய்யையும் மெய்யையும் பிரித்து பார்க்கக் கூடிய சுயஞ்ஜோதியாக உள்ளது. நாத சப்தமி எனும் ஏழு ஸ்வரமாக விளங்கும் பெரியோர்களின் நாதம் எக்காலத்தும் செயலுடையதாக, **பிறந்தது இனி இறவாத பேசும் பஞ்சாட்சரமாக** நின்று விளங்குகிறது.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் : வாக்கியம் எண் - 06ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**

னித்தியத்திற்கென படைக்கப் பெற்ற மனிதனின் மனதை சிவராஜனாக, தர்மராஜனாக மாற்றும் செயலே பிரம்மவித்தை. அசலை நினைவூட்டி, விதியெழுத்தை மாற்றி, மதியெழுத்தை நம் தலையில் பெரியோர்கள் பதிக்கிறார்கள். தன்னையறியும் தவமுறையை அறிந்து உணர்ந்தவர்களிடம் அறிவைப் பெறுவதே மெய்ஞ்ஞான வாழ்விற்கு மிக மிக அவசியமான ஒன்று. பரிசுத்த ஆவித்தெய்வத்தின் துணையோடு மெய்ஞ்ஞானப் பாதையில் நடந்து எமவாதையைக் கடக்க வேண்டும் எனும் குருபிரானின் ஆசீர்பாத உரையுடனும், ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 08-03-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி பரஞ்ஜோதி முனிவர் அருளிய **கல்லாலின் புடை யமர்ந்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :** அருட்குருவாம் அம்பலவாண தேசிகரிடம் கல்லால மரத்தடியில் வல்லார்கள் நால்வரும் வாக்கிறந்து பெற்ற பூரணம் போன்றே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களும் இதனை பெற்றுள்ளனர். பூமியைப் போல் உற்பனத் தாயகமாக பெண் வடிவில் வந்த ஞானிகளே ஔவையார், காரைக்கால் அம்மையார், ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார்.



Copyright © AMNA Trust, Chennai

முருகப்பெருமானுக்கு சக்திவேல் அளித்த தாய் போல், வாலைத்தாயான குருபிரானே நம்மை தேவசூலில் வைத்துப் பெற்ற, பெண் ஆணாக வடிவெடுத்த பதாம்பூரணி.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் : 205 - குருபிரான் அருளமுதம்:** குருவருளால் மனதின் மயக்கம் தீர்ந்து பிறப்பெனும் பேதமை நீங்கப் பெற்றவர்களே அறிவைப் பெற்ற மக்கள்.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்தியவேதம் : வெளிப்படுத்தின சுவிசேஷம் 7 : 2, 3, 15, 16.**
சர்வத்தையும் ஆளும் அதிகார கர்த்தரே அவரவரின் சிரசில் வீற்றிருக்கும் நான்முகன். குருவின் கவசத் திருநீறால் நெற்றிக்கண் திறக்கப்பெற்றவரே புலனைந்தும் வென்று திருவடிப்பேறு பெற்ற தேவனின் ஊழியக்காரர். தில்லை அமுதான ஜீவனீர் அருந்தி, இரவு பகலற்ற தேவனின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் னித்திய ஜீவனை தரிசித்து, பசி தாகமற்ற ஞான பூமியில் வாசம் செய்பவரே பரலோகவாசி.

**பத்தியத் திடம் - குருபிரான் அருளமுதம்:**
பிறவிக் கடலில் சிக்கித் தவிக்கும் மாந்தரை கரை சேர்க்கும் பருமரக்கலனே பரமகுரு. அலையும் நம் மனதின் அலைவறுத்து, அறிவு நிலை அறிய வைத்து, ஆத்ம வீடடைய அருள் புரிகிறார்கள். உள்ளும் புறம்புமாக இருக்கும் பிரபஞ்ச ஆற்றலை பிரம்மவித்தை மூலம் நாம் அறிய அருள் புரிவதும் அவரே. தத்துவ நிலையை தன்னில் அறியச்செய்து தவ நிலையில் நாம் நிற்க ஆசான் அருளும் திடமே பத்தியத்திடமாகும். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 09-03-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **முன்னுரு தங்நுர சிக்குல மாமணி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது

*ஜீவசகோதரர் கௌதம்:*
சஞ்ஞீவி சடாமுடி மகுடராய் வரும் குருபிரானின் திருவருளே பிறவிப் பிணியில் இருந்து நம்மை மீட்டு பிறவாமை எனும் பேரின்ப வரமளித்து சிரஞ்ஞீவியாக வாழ வைக்கிறது. சிற்றறிவில் கற்றும் பயனற்றவர்க்கு கற்பகத் தருவாக மானிடச் சட்டை தாங்கி வந்து வரம் அளிப்பவரே சற்குருபிரான். முத்தி நெறியாகிய தன் உயிரை தன் பெட்டகத்தில் வைத்துப் பூட்டும் மெய் வணக்கத்தை நம்மிடம் போதிக்கும் குருபிரானே போதனாச்சாரியார்.
னரன், மனு, தேவனை அடையாளம் காண இறைவன் உண்டாக்கியதே எழுவகை தோற்றம். அரூபமாக உள்ள மனமாகிய சைத்தானிடம் சிக்கி, பிறவிச் சூழலில் அகப்பட்டுக் கொள்பவனே நரன். தனிச்சீதனமாகிய ஆறாவது அறிவின் சைதன்யத்தை உணர்த்தி முக்தியடைய வழி காட்டும் தேவ குருபிரான் அவர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றவனே மனு. அறிவு வடிவான ஆசான் நம்மை ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலத்தில் ஆக்கி வைக்கும் போது அவரே தேவன். மூலமந்திரத்தை பிரகாச ரூபமாக அவரவரிடத்தில் சந்திக்க வைக்கும் செயலுள்ள தலமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் பார்த்திபன்:* மனிதன் அறம் சார்ந்த வாழ்வு வாழ அடி நாதமாக வந்ததே வேதங்கள். ஆசான் நம்மிடம் விதைத்த நாத வித்தின் பலனை இடைவிடாத மெய் வணக்கத்தின் மூலமே உணர முடியும். புண்ணிய வாழ்வளிக்கும் மெய்க்கல்வி கலாசாலை இன்று ஆதி மார்க்க னீதி அவையாக முளை எழுந்து முழு தீரத்துடன் முழங்கிக் கொண்டிருக்கிறது. பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.

*பிரியையே! ஆகையால் மோக்ஷப் பிரபாப்திக்காகக் குருவையே பஜித்தல்வேண்டும். ஒரு சற்குரு வில்லாமல் மூடர்கள் அந்த மேலான பதத்தை அறியவே முடியாது.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## 09-03-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **சத்தியம் திரண்ட சாயுச்யக் கடலே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.



*ஜீவசகோதரர் கிரகதுரை:* காலத்தின் மூலப் பொருளாக விளங்கும் வினைத் தலைவனாகிய மனமே, மனிதனின் பிறவிக்கு காரணம். அதனை சிவச்செங்கோல் கொண்டு அறிவாக்கி, பிரணவ நாட்டிற்குப் போய்வரும் பிரம்மவித்தை செயலை பழக்கி, காலமற்ற இடத்தில் குடியேறச் செய்வதே காமீல்களின் நோக்கமாகும்.

*ஜீவசகோதரர் ராஜமகேஷ்:* மனம், கவனம் இவற்றை ஆதாரமாகக் கொண்டு எங்கும் மனித உடலை அன்பு எனும் சிவமாக ஓயாது ஒழியாது காத்துக் கொண்டிருக்கும் வாலைத்தாயான பரம்பொருளின் செயலோ மகா ஈடு இணையற்றது. அது போல் தன் ஞானச்சூலில் வைத்து கிரகஸ்தனாக அறிவுப்பிறப்பில் நம்மை ஈன்றெடுக்கும் பிறப்பறுக்கும் பிஞ்சகனான குருபிரானின் செயலும் மகா ஈடு இணையற்றது.

*ஜீவசகோதரர் ராஜேஷ்:* திருவானைக்காவல் கோவில் - நீரின் சிறப்பை உணர்த்தும் தலமாகும். தந்தையின் சுக்கில ஜலத்தில் ஜனித்த மனிதன், தன் வாழ்வு முடிந்ததும் மீண்டும் ஜலத்தினில் கரைகின்றான். புறந்தூய்மை நீரால் அமைவது போல அகத்தூய்மை ஆசானின் வாய்மையால் அமைகின்றது. நீரின் அம்சமான மனத்தினால் உண்டாவதே பிறப்பு. தேசிகரின் தீர்த்தமான வாசகம் நரனை மனுவாக்கி தேவனாகப் படைப்பதையே நீரின்றி அமையாது உலகு என வள்ளுவரின் வாய்மை உணர்த்துகிறது.

*ஜீவசகோதரர் பழனிகுமார்:* படைப்பு அனைத்தும், இறைவன் மனுவுக்கே படைத்தான். வினைக்கு ஏற்ப உண்டாகும் மனிதப் பிறப்பின் கடன், எண்ணத் தூய்மையால் தான் தீரும். நம் மும்மலம் தீர்த்து அறிவெனும் அகரத்தை காட்ட வல்லவரே யதார்த்த தேவகுரு. அவரிடம் பெறும் தேவப்பதமே இறைவன் செய்நன்றியை செலுத்திய சீமான் ஆவதற்கான வழி.

*ஜீவசகோதரர் பிரபு:* மனிதனின் நோக்கம் மரணமிலாப் பெருவாழ்வே. மனுவின் மரண பயம் தீர்க்கும் மாசற்ற வல்லவரே ஆசான். அவரருளால் அழிதேக ஆசை விட்டு, நித்திய தேகத்தில் குடியேறி வாழ்வதே மரண பயமற்ற வாழ்வு.

*ஜீவசகோதரி வசந்தி:* எட்டிரண்டும் அறியாதவன் ஏழை என்கிறார் திருமூலர். அகர உகார விந்து நாதமாக விளங்கும் பிள்ளையார் சுழியே ஓம் எனும் பிரணவமாக பிரம்மமாக உள்ளது. ஆரும் அறியா ஒரு வாசலுள் நம்மை புகுத்தி, ஆன்ம சொரூப தரிசனம் காணும்படி ஆக்கி வைக்கும் குருபிரானே முழு முதற்கடவுள்.

*ஜீவசகோதரி சங்கீதா:* தன்னை அறிவதுவே மனிதனின் தலையாய, முதல் கடமையாக உள்ளது. ஆசானை பின்தொடர்ந்து ஆறாவது அறிவை அறிந்து மனம் செம்மையாவதன் மூலமே தன்னையறியும் அறச்செயல் கை வரவாகும்.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் அருளமுதம்:**
இவ்வுலகை முழுமுதற் கடவுளாகிய இறைவன் பரம அணுவாக இருந்து இயக்கிக் கொண்டு இருப்பது போல், எதற்கும் முதற் பொருளாக உள்ள ஜீவ ஆவிப்பொருளே இப் பூதஉடலை இயக்கிக் கொண்டு இருக்கிறது. அழிவற்ற ஆகாயம் போல் இருப்பதே மாறாத சத்தியம் எனும் அறிவு. தன்னிடம் உள்ள ஆற்றல்மிகு அறிவை அறியாமல், வினைப் பிடியில் சிக்கியவனை மீட்கும் செயலே பிரம்மவித்தை. பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 13-03-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. வாசுதேவன்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர்பாதத்துடன் மாணிக்கவாசகர் அருளிய **அம்மையே அப்பா ஒப்பிலா மணியே...** எனும் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
1600 வருடங்களுக்கு முன்னரே கீழான எண்ணங்களால் மூச்சு வீணாகி, வாழ்நாள் சுருங்கும் என்பதை **பொய்மையே பேசி பொழுதினை சுருக்கும்** என மாணிக்கவாசகர் அருளியுள்ளார். ஜாதி, குலம், கோத்திரம், ஆச்சாரம், அனுஷ்டானங்களை தொடர்ந்தாலும் ஜீவனை கண்டவர்களே அறிவு துலக்கம் பெற்று பிறவாமை பெற்றவர்களாக இருப்பார்கள்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - வாக்கியம் எண் 6ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம் :**
இவ்வுலகில் பிறந்த சிசு இறைவனின் கருணையால் ஆறு பிறப்பு பிறந்தாலும், ஒரு மெய்க் குருபிரானிடம் செயலுள்ள மந்திரங்களை பழகி, ஏழாம் பிறப்பான அறிவுப் பிறப்பில் பிறக்கும் போதே தன்னை அறிந்து ஜாதிக்கு உரியவன் ஆகிறான்.

**பத்தியத்திடம் - குருபிரான் அருளமுதம்:**
தன்னிலை கண்டு உணர்வது தான் மெய்ஞ்ஞானம். அதற்கான பொருள் இந்த அனித்திய உடலில் உள்ளது. சிவ தத்துவத்தின் ரகசியமான முப்பத்தாறு கண்ணிகளாக, மண்ணிலே மயங்காது இருக்கும் மகா நிகரற்ற செயலான ஜென்ம சாபல்யத்திற்கு உரிய வழியை அருள்வதே பத்தியத்திடம். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 20-03-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பிரம்மோதய மெய்வழிசாலை ஆண்டவர்கள் அருளிய **வான வேதாந்த சஞ்ஞீவி...** எனும் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபெருமான் அருளமுதம்:**
வான நாட்டிலிருந்து இறங்கி வந்தருளும் வேதாந்த வா சுகியின் சஞ்ஞீவியே நித்திய பேரின்பத்தில் ஆழ்த்தும் நிபுணமணி விளக்காகும்.

**எமன்படரடிபடு திருமெய்ஞ்ஞானக் கொரல் வாக்கியம் எண்:6 ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:** அடக்கம் என்பதும் அமரத்துவம் என்பதும் தன்னுள் பிரசன்ன வதனமாக உள்ள கோடி சூரிய பிரகாசப் பொருளை தன்னில் அறிவதாகும். அமரத்துவம் என்பது வாழும் காலத்திலேயே அடையும் நிலையாகும். பாழில் பழகிய மனதை, அறிவு வசமாக்கி, செல்லும் நாள் சென்றிடாது நாலுகலை பாழ்போகாது, ஞான நாளாக்கும் நிலையை பெற்றுத் தருவதே ஆதி மார்க்க னீதி அவை.



Copyright © AMNA Trust, Chennai 

**பத்தியத்திடம் - குருபிரான் அருளமுதம்:**
இன் பொருளின் சிறப்பை அறிந்து பலன் கை வரவாகும் நாளே அறிவுப் பூர்வமான நாள். பாழிலே மனத்தை விடாமல் அறிவு உருவாகி மனம் சைதன்யமாகி படைப்பு ஒழிந்தால் பேரின்பம் லபிக்கும். நுண்ணிய அருந்தலமாகிய மயிர்ப்பாலத்தில் ஏறும்வழி, முப்பாழாக இருப்பதை முப்பாலாக மாற்றிப் பேதமை என்னும் பித்தத்தை தெளிவிப்பவரே பிச்சாண்டவர். சாமத் திருடரிடமும் மயக்குகின்ற கடல் கன்னியிடமும் சிக்காமல் மனமென்னும் சாத்தானை ஜெயித்தவரே ஷெய்கு. சிற்றணு வடிவாக விளங்கும் ஆவிப்பொருளே ஆன்மா. அது அழிதேகத்தை விடுத்து சூக்குமத்தை கைப்பற்றி லிங்கத்தின் மூலமாக சுவனத்திற்குள் நுழைவதே பெருவாழ்வு. இதற்கென மனிதன் வாங்கி வந்த சீதனக் கடனே ஏழ் நிலைக் கம்பமாய் நின்று விளங்கும் அறிவு. தங்கமயமாய் இலங்கும் அறிவு மாணிக்கத்தை நம் தலையில் பதிக்கிறவர்களே கோஜா நபி. சிற்சபை, விந்து, அறிவு, பாலம், முச்சந்தி போன்ற நிலைகளைக் கைகொள்வதற்கு கருப்பொருளாக நின்று விளங்கும் காருண்ய விம்பத்தினை தீதாரு தரிசனையாகக் கண்டு, பண்டு பழுத்த கொண்டல் வாய்மையாகப் பொழிபவர்களே முஹைதீன் ஆண்டவர்கள். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 22-03-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியானை அறிய வைத்து…** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண்: 206 - குருபிரான் அருளமுதம்:**
னீதியான பிரளயச் செம்மல்கள் நடத்திய ஆறு பிரளயங்களும், ஒவ்வொரு மனுத் தலையுள்ளும் னீதி னடவு நிகழ்வதற்காக, குருபிரானின் திருக்கரம் கொண்டு அருளப்பெறும் ஆசீர்பாதம் என்பதை அறிவை அறிந்தவர்களே அறிவர்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - வெளிப்பாடு, அதிகாரம்12 :** சர்வ மதங்களின் அடிநாதமாகிய மறலி கை தீண்டாமை எனும் தெய்வீகச் செயலை அருள்பவரே அருட்குரு. ஏழு பொற் கலசங்கள் கொண்ட வித்தியாதத்துவம் எனும் அமானிதப் பொருளை அறிந்தடைந்த உயிருடலமே, தேவத் தூதர்களாகி ஜென்ம சாபல்யம் பெறுகிறார்கள்.

*ஜீவசகோதரி பானுமதி:* **அல்குரான் அத்தியாயம் - 25:** நன்மை தீமைகளை பிரித்து காட்டுவதே அல்ஃபுர்கான். *கதிமுகம், தீன்முகம், புகழ்முகம், பதிமுகம், முதல்முகம், மதுமுகம், பூமுகம், யாமுகம், அயின்முகம், சூல்முகம்* என பல பரிமாணங்களில் ஞானக்கடலாக வரும் குருபெருமான், சீடனின் உள்ளத்திலுள்ள அசத்தை நீக்கி, சத்து பெட்டகத்துள் நுழைத்து சாவாவரம் அருள்கிறார்கள்.

**தௌஹீது காமீல் - குருபிரான் அருளமுதம்:**
இறை நிலையாகிய தௌஹீதை சிவா அனுபவமாக பெற்று வருபவர்களே காமீல் நாயகம். அண்டமாகிய விந்துவும், பிண்டமாகிய நாதமும் சேர்ந்து ஞானக் கரு உண்டாகும் இரகசியத்தை உபதேசமாக அருள்பவரே மஹபூபு. வித்தில்லா வித்தாகிய ஆசானின் னாதமானது, பொன்னில வளத்து மாணாக்கரின் மனதில் ஊணப்பெற்று, தெய்வீக மரமாக பணர் விரித்து வளரச் செய்யும் விந்தை இரகசியத்தை வரமாக பெற்றவர்களே, சர்வ வேதங்களின் உயிராணிச் செயலை உணர்ந்த உத்தமர்களாக வாழ்கிறார்கள் எனும் அருளுரைகளுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai April 2025

## 23-03-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

பரிசுத்த ஆவித் தெய்வம் மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* நீங்காது அகலாது அணுகாது, பன்னாள் இருந்து பழகித் தேர்ந்து, தேகமெனும் குன்று மல வெம்மாயை கடந்து, உயிர்ப் பயிரேற்றி, வெளிக்குள் வெளி கடந்து பிறவாமையை அருள்வதே பெரியோரின் திருச்சன்னிதி. அனைவரையும் சமமாக ஒரே ஜீவனாகவே பார்க்கின்ற பெரியோர்களின் பரிசுத்த அருட்பிரணவம், நம்மை வாசி எனும் குதிரையின் மேல் ஏற்றி மூலவள நாட்டிற்கு கூட்டிச்சென்று மனதை நிசப்தத்தில் ஆக்குகின்றது. உருமுர சறைந்து காட்டி நீதம், அநீதம் இன்னதென அறிவித்து ஓதாமல் ஓதி, வருகின்ற நாட்களை எல்லாம் நல நாளாக லாபத்தில் ஆக்கும் சாகாக் கல்வியை அருளி தீராவினையை தீர்ப்பவரே குருபெருமான். எல்லை திசை அற்ற இடமாகிய சயனப்பதியார் வீற்றிருக்கும் திருப்பள்ளியறையில் தூங்காமல் தூங்கி சுகம் பெற்று இனிச் சாகாதிருக்கும் இடத்தில் பேரின்பம் அனுபவிக்க செய்வதே பெரியோர்களின் திருச்செயல்.

*ஜீவசகோதரர் குமார்:* அநித்திய ஆக்கை குடிலில் வாழும் மனுவை நாசி வெளியே மூச்சு ஓடாத் தவமான அறச்செயலை பழக்கி, இருளை நாசமாக்கி, செல்லும் நாள் சென்றிடாத னித்தியத்தில் ஆக்கி வைப்பவர்களே சத்குரு. ஐவழி விளைவுக்கும் அப்பால் உள்ள நிச்சயப் பொருளை இருந்ததனை இருந்தபடி காட்டி, காலச்சக்கரத்தில் மாட்டிக் கொண்டிருப்பவர்களை மீட்பிக்க வருவதே அளக்க முடியாத மதிக்கடலாக வரும் அவதார புருஷர்களின் அன்பு. நல்ல தண்ணீராகிய திருப்பாற்கடலை என்றும் குறையாத அருளமுதை உட்கொள்ளச் செய்து பரமபதம் ஆகிய நாலாம் பதத்தை நோக்கி பயணிக்க வைப்பதே மெய் மகத்துக்களின் நோக்கம் எனும் பகிர்தலுடன் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 23-03-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியானை அறிய வைத்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி கல்பனா:* நமது வினையினால் உண்டான தீட்டு துடக்கு தோற்றமுடைய பிறப்பே உலகப்பிறப்பு. தாயும் தந்தையுமான குருபெருமானின் வாய்மையால் அரூபத்தில் படைக்கப்பெற்ற பரிசுத்த அறிவுப் பிறப்பே மறுபிறப்பு. **வானவர் ஆக மறு பிறப்பெடுப்பாய்**. மனித சட்டையிட்ட மனுப்பிராணியாய் இல்லாமல் அறிவுப் பிறப்பு எடுத்து வானவராகுவதற்காக எடுத்து வைக்கப் பெற்றவையே உபநயனம், சுன்னத்து, ஞானஸ்நானம் போன்ற சடங்குகள். பெரியோர்களின் வாய்மை துலக்கம் அநீதத்தில் இருக்கும் நம் மனதை நீதமாக மாற்றி புதிய ஜீவனைத் தந்து உயிர்ப்பிக்கின்ற செயலே மறுபிறப்பாகும்.

*ஜீவசகோதரி நாகமணி:* பஞ்சபூதங்களில் ஒன்றான ஆகாய அம்சத்தின் சத்தமே மனிதனின் அடையாளமாகவும், அவனை தேவன் ஆக்கும் ஓங்காரத் தொனியாகவும் உள்ளது. தன்னை அறிந்த பெரியோர்களின் குற்றமற்ற நிறை நாதமே பிறவிப்பிணி தீர்க்கும் நாத மருந்தாக விளங்குகிறது.

*ஜீவசகோதரர் சுந்தர்:* பிறப்பால் ஒரு சமயத்தில் இருந்தவன், ஞானப்பிறப்பில் தான் உண்மையான சமயத்தில் ஆகிக் கொள்கிறான். சொன் னயனக்கலை மூலம் மனுவை ஈசன் ஆக்கி, தெய்வக் குபேர பூவண வசந்த காலத்தில் வாழச்செய்யும் வாழையடி வாழையென வந்த குலதெய்வமே நம் குருபெருமான்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் கிரிதரன்:* வாழும் காலத்தில் முத்தி பெற வழி கூற வந்தவையே மதங்கள். முத்திக்கு மூலம் ஆசானின் இரக்கம். பெரியோர்களை பேணித் தமராகக் கொண்டு பிறப்பு இறப்பு எனும் சுழற்சியில் இருந்து விடுபட்டு, பிரம்மத்தில் ஐக்கியமாவதே முத்தி எனும் விடுதலையை பெற்றுத் தரும்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* மெய்க் குருபிரானின் வழி காட்டுதல் மூலமே புண்ணியத்தை ஈட்ட முடியும். காலத்தை கைக்கொள்ளும் மெய் வணக்கத்தின் மூலமே மெய் உணர்வு பெற்று தன்னை அறிய முடியும்.

**குருபிரான் அருளமுதம்:** அன்னமய கோசமான தூல உடலையும், மன உடலையும் ஒன்றாக இணைக்கும் பாலமே வளி உடல். விஞ்ஞானமய கோசமாகிய அறிவுடலைக் கொண்டே மூச்சு இயங்குகிறது. ஆலம் - ரூஹு - ரூஹானி எனும் முப்பொருள் கோலமாக அவரவரின் நாமமாக விளங்கும் ஆனந்தவுடலே சொர்க்க நரகத்தின் தீர்ப்புக் கர்த்தாவாக உள்ளது. அக புற சமயங்களான 12ல், அக சமயத்தில் ஒன்றான ஏகாட்சரமே அறுசுவை ஒளிக்கும் அகாரமாக மறுபிறப்பு பூமியாக உள்ளது. ஆசானின் முத்தி நடனமான அவ் வா சுகியின் வாய்மையே சவத்திலிருந்து மாற்றி ஊமை மூலத்தில் ஒடுங்கச் செய்கிறது. இதன் அடிநாதமே மறலி கை தீண்டா மெய்மதம். எமன் கை தீண்டாத சுக பிராப்தி வாழ்வை வழங்க வந்ததுவே ஆதி மார்க்க னீதி அவை. பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 27-03-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அளவிலா வெகு காலமிப் பூமியிற்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் குமார்:* மிகப்பெரிய தோஷமாகிய காலனின் கைவசமாகாமல், மெய்க் குருபெருமான் நம்மை மாற்றி வைக்கும் நன்னாளே பிரதோஷம். பழம் புராதனத்தை தங்கள் திருக்கரத்தில் ஏந்தி வரும் பூர்வீகரே குருபிரான். பிறவிச் சுழலில் சிக்கி இருக்கும் நம்மை மீட்டு பிறவாமையை அருள்பவரே குல குருபிரான். தந்தையின் நினைவு தொட்டு தாயின் கருவறை வந்து இன்று வரை நிழல் போல் நம்மை காத்துக் கொண்டிருக்கும் திருவடியை அறியச் செய்து ஏழாம் பிறப்புடலம் எடுக்கச் செய்கிறார்கள்.

**எமன்படர்அடிபடு திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் எண் 6ன் தொடர்ச்சி :**
மெய்க் குருபிரானின் சகிப்புத் தன்மைக்கு நிகரானது உலகில் ஏதுமில்லை. நரனை மனுவாக்கி மனுவை தேவனாக்கும் நித்திய முத்திச் செயலை செய்து வைப்பவர்களே கருணா மூர்த்தியராகிய குருபிரான்.

**தௌஹீது காமீல் - குருபிரான் அருளமுதம்:**
ஆண்டவர்கள் அருளிய உயிராணித் திருவசனம் மயக்கத்தை தெளிவிக்கும் மாமருந்தாக வந்து அனைவர் இடத்திலும் உள்ள மெய்ப்பொருளை அறிவிக்கின்றது. ஆதிக்கு முன் அனாதியாக திருவுருத் தாங்கி வந்து இறைவன் இன்னான் என அறிவிக்கும் ஹூப்பெனும் கடலாகிய றப்பெனும் மஹபூபு சுபஹானியாகிய இறைவனே குருபெருமான். மாயை எனும் மயக்கத்தில் இருக்கும் மனத்தை அறிவாக மாற்றும் அருள் அமுதத்தை குருபெருமான் ஊட்டுகிறார்கள். பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவானது.

*துர்ச்சங்கத்தைவிட்டு விலகி, பாப கர்மங்களின் தொடர்பற்று, குரோதம் கர்வம் முதலியவற்றை விட்ட தியாக சிந்தையைப்பெற்ற ஒருவனுக்கு சற்குருவின் பேரிரக்கத்தால் தேவப் பிறப்பாகிய மறுபிறப்பு அளிக்கப்பெறுகிறது.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 29-03-2025 ~ சனிக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே மலர்ந்தன.

*ஜீவசகோதரர் கௌதம்:* வேதாந்த அலங்கமாக, மூல மந்திரமாக, அஷ்டாட்சரம், காயத்ரி, கலிமா என அவரவரின் நாமத்திற்கான பொருளை தரிசிக்க மெய்க்குருபிரான் செய்யும் உதவி நிகரற்றது. **நானடா நான் இருக்கும் இடம் தான் காட்டி நவிலுவார் நன்மார்க்க நாதர் தானே** என சுப்பிரமணியர் யோகஞானம் அருளுகிறது. இத்தீர்க்க தெரிசனத்தின்படி சூக்கும உடம்பாம் சுத்த உடம்பை சொந்தமாக்கி பெருங்கவலை தணிக்கும் நல்ல கதி நிலையை சர்வ மக்களுக்கும் அருளுபவர்களே மெய்க்குருபிரான். பொய்யகத்தில் உறைந்துள்ள மனதில் மெய்யறிவு உதயம் காட்டி அக விளைவு குடியேற்றி அவரவரின் அனுபவத்தை வேத சாட்சியாக உணர்ந்து அறிந்தடைந்த உயிருடலத்தில் ஆக்கி வைக்கின்றார்கள்.

*ஜீவசகோதரர் குமார்:* இப் பூவுலகில் மெய் மகத்துக்கள் வரும் காலமே யவ்வன வசந்த காலம். மெய் மகத்துக்களால் இறைவனின் கஜானாவிலிருந்து இனாமாக எடுத்து வழங்கப்பெறும் அமிர்த வர்ஷிப்பாகிய மன்னா, அனைவரையும் பிரம்மவித்தை செயலில் பழக்கி, மறலி கை தீண்டாமை என்ற பதத்தை வழங்குகின்றது. எதார்த்த எண்ணம் கொண்டு தொடர்வோர்க்கு திட வைராக்கியமும் கவனமும் மெய்ஞ்ஞானப் பாதையில் அடிப்படைத் தேவையாக இருக்கிறது. பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவானது.

## 30-03-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **தரைதனில் னரராய்த் தோன்றி...** எனும் ஸ்தோத்திர பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
குருவருள் கொண்டே அவரவருள் இருக்கும் மகா பரிசுத்தத்தை அறிய முடியும். விழிப்புலகில் இருக்கும் மெய் மகத்துக்களின் அனுபவமே வேதமாகும். நாழிக்கிணறு, சூரசம்ஹாரம், சஷ்டி இவற்றின் தத்துவ உண்மைகளை அறியச்செய்து, ஜீவன் வீணாகாமல் காக்கும் குருவின் செயலே சன்மார்க்கம்.

*ஜீவசகோதரி லாவண்யா:* மெய்க்குருவின் தயவால் ஜீவதேகம் அறிந்து பூரண ஞான நிலையான னித்தியத்தை அடைந்து ஜென்ம சாபல்யம் பெறுவதற்குப் படைக்கப் பெற்றவனே மனு.

*ஜீவசகோதரர் மாதவன்:* பிள்ளையார் சுழியாக, நற்றாளாக, உணர்வாக, சிவசக்தியாக, அறிவாக, பாதமாக விளங்குவதே புகழுடம்பு. மெய்க் குருவின் அருள் அமுதத்தால் தன் குலம் ஜாதியை அசலாக அறிந்து புகழ் உடம்பில் குடியேறுவதே தன்னை அறிதல்.

*ஜீவசகோதரி வளர்மதி:* சாகாக் கல்வியை கற்பிக்கும் குருபெருமானே தாயும் தந்தையுமாக இருப்பவர். அருட்பெருஞ்ஜோதியின் அருளால் புலன் வழி செல்லும் மனதை அறிந்து தூலம் உள்ள போதே பிறவா நாட்டில் பிறந்து பேரின்பம் அனுபவித்து மரணமிலாப் பெருவாழ்வு வாழ வேண்டும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் தட்சிணாமூர்த்தி:* மனதற்ற பரிசுத்த நிலையான அடக்கத்தை பெறுபவனே அமரன். துக்க உடலின் தூக்கம் தவிர்த்து தூங்காமல் தூங்கி மெய் உணர்வு பெற்று, நான் ஆன்மா, பசு எனும் சிற்றணு வடிவான ஜீவனை அனுபவத்தில் உணர்த்த வல்லதே குருவின் தயவு.

*ஜீவசகோதரி உமாராணி:* மெய்ஆசான் அறிவிக்கும் அரிதுயில் நிலையே தூங்காமல் தூங்கும் சிவ நிலையாகும். அவர்களின் அருள் வாக்கே வெளிச்சப் பொருளாகும். ஆறாவது அறிவாகிய மனதின் செயலறிவித்து, குருபிரானின் வாய்மையே நம் மனதை அறிவாக மாற்றி திருச்சிற்றம்பல எல்லையில் சேர்க்கிறது.

*ஜீவசகோதரி சரஸ்பதி வண்ணன்:* ஆசான் அருளால் அலையும் மனதை ஆமை போல் ஐந்தடக்கி வைராக்கியம் விடாமுயற்சி கொண்டு அகமுகமாக மாற்றி சித்தத்தில் விளக்கேற்றி சாகா வரம் பெறலாம்.

*ஜீவசகோதரி சஹானா:* மெய்க் கல்வி வளர் பிறையாகவும், பொய்க் கல்வி தேய் பிறையாகவும் உள்ளது. அவரவரும் தன் நாமத்தின் பொருள் அறியும் போதே இறப்பொழிக்கும் சன்மார்க்கம் பெற முடியும். மனமாகிய சகுனியை அடக்கி அறிவை கூராக்குவதே மகாபாரதத்தின் சாரம்சம்.

*ஜீவசகோதரி பூர்ணிமா:* இருதயமாம் பெருவெளியில் மனம் அடங்குவதே சைவம். நாம் மாற்றிப் பிறக்க வகையறிவித்து நம்மை தேவனாக்க மனுக்கோலத்தில் வரும் இறைவனே குருபிரான். குருவின் தயவால் மனதற்ற பரிசுத்தமுடன் இருவினை கடந்து இறைவனின் இருப்பிடம் சேர்வதற்கான சாதகமே மெய்வணக்கம்.

அசைவற்ற சைவத் திருமேனியே அசையும் போது அலகையாகிறது எனும் குருபிரானின் அருளமுதுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

*பார்வதி! சற்குருவின் கருணையினால் சீடனின் இருதய முடிச்சு அறுகின்றது. சந்நேகங்ங ளெல்லாம் னசித்துப்போகின்றன. பூர்வ கர்மங்ஙளெல்லாம் ஒழிந்து னாசமாகின்றன. வேதசாஸ்திரங்ஙளில் சொல்லியுள்ளதை அனுசரித்து சிறப்புடன் செய்யப்பெற்ற குருபக்தியினால் சீடன், அறியாத காலத்தில் செய்த கோரமான பாதகங்ஙளினின்றும் விடுபடுகிறான்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**09-03-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **மௌன வைப்பின்...** எனத் தொடங்கும் குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. ஆதி மான்மியம் சன்னதம் பெறு பருவத்தில் இடம் பெற்ற **இந்நிர கிரண ஒளியில்...** என்ற மனனப் பகுதி ஓதுவதற்கான பயிற்சியுடன் அவை இனிதே நிறைவானது.

**23-03-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **மாயக்கூத்தின் வகை யறியாமல்...** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. ஆதி மான்மியத்தில் மூல பண்டாரப் பருவத்தில் **ஆதி மூல விதி வேச...** எனும் பகுதி ஓதுவதற்கு பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**30-03-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் **அண்டராலும் அறிய...** எனும் குருஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்து, சென்ற வாரத்தில் பாடப்பெற்ற ஆதி மான்மியம் மூல பண்டாரப் பகுதி பயிற்சி அளிக்கப் பெற்றது. அனைவரின் இனிமையான குரல் சாதகத்துடன் அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*ஜனங்கள் சிலர் சிவனையும், சிலர் விஷ்ணுவையும், சிலர் பிரம்மாவையும், சிலர் சத்தியையும் தெய்வமென்று சொல்லி வணங்கி - தன் தன் தெய்வமே மேலானது என்று வீணாக வாதம் செய்கிறார்கள். இவர்கள் குரு முகமாக மெய்யை அறியாததால் பிராந்நர்களாய் அதாவது மயக்க முற்றவர்களாய்த் தன்னை அறியாத மாக்கள் அதாவது மிருகங்களுக் கொப்பானவர்களாகிறார்கள்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## மார்ச் 2025 மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 02-03-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** திரு முன்னிலையில் மெய்வழி குழந்தைசாமி ஐயா அவர்களின் ஆண்டு பூர்த்தி விழா சிறப்பாக நடைபெற்றது.

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **01-05-2025 / சென்னை வியாழக்கிழமை** | குருபிரான் சாலை ரவி அப்பா திருமுன்பாக மே தின சிறப்பு அவை சென்னையில் நடைபெற உள்ளது. |
| **11-05-2025 / சிவகாசி ஞாயிற்றுக்கிழமை** | குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள் சிவகாசியில் எழுந்தருளி அருளமுதம் வழங்க இருக்கிறார்கள். |
| **12-05-2025 / சுசீந்திரம் திங்கள்கிழமை** | குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள் தன் அங்கத்தினர்களுடன் சுசீந்திரம் திருக்கோயிலுக்கு விஜயம் செய்ய உள்ளார்கள். |



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2025 மார்ச் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 67**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 45 – Month: April 2025*